E.P.No. 2/2019
Date.17.07.2019
Witness: MW 1 Thiru.Premkumar

சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியிடம் 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -

நான் 24 ஆண்டுகளாக 1 ம் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் வேலை செய்கிறேன். நான் அலுவலக உதவியாளராக முதலில் பணியில் சேர்ந்தேன். தற்போது அலுவலக மேலாளராக பணிபுரிகிறேன். ஆரம்பத்தில் இருந்தே நான் அலுவலக பணியில்தான் உள்ளேன் என்றால் வால்பாறையில் எஸ்டேட் அலுவலகத்தில் பணி செய்கிறேன். வழக்கு சம்பந்தமான விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் அந்த சமயத்தில் நான் பணியில் இருந்ததால் எனக்கு நேரடியாக தெரியும். எதிர்மனுதாரர்களுக்கு இடையில் குத்தகை ஒப்பந்தம் ஏற்பட்ட சமயத்தில் நான் அங்கு பணிபுரிந்தேனா என்றால் ஆமாம். தொழிலாளர்களுக்கு சம்பளம், போனஸ், விடுப்பு வழங்குவது, மருத்துவ செலவு போன்றது சம்பந்தமாக கோரிக்கை வரும்போது எங்கள் அலுவலகத்தில் இருந்து அதை பரிசீலனை செய்து அனுமதி வழங்குவோம் என்றால் ஆமாம். தொழிலாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது எங்கள் அலுவலகம் மூலம் எடுக்கப்பட்டது என்றால் குத்தகை ஏற்படுவதற்கு முன்புவரை அப்படித்தான் எடுத்துவந்தோம். மனுதாரரை 12.02.2011 அன்று வேலை நீக்கம் செய்வதாக அவரது குடியிருப்பு கதவில் உத்தரவு ஒட்டியது 1 ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் என்றால் ஆமாம். 12.02.2011 தேதியில் குத்தகை நிலுவையில் இருந்தது என்றால் ஆமாம். மனுதாரர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று 2 ம் எதிர்மனுதாரர் எங்களுக்கு எழுத்துபூர்வமான கடிதம் அனுப்பினாரா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை தவிர வேறு அறிவிப்புகளிலோ அல்லது எதிர் உரையிலோ 2 ம் எதிர்மனுதாரர் வாய்மொழியாக கேட்டுக்கொண்டதன்பேரில்தான் மனுதாரரை பணிநீக்கம் செய்தோம் என்று 1 ம் எதிர்மனுதாரர் கூறியுள்ளாரா

என்றால் இல்லை. என்ன ஒழுங்கீனத்திற்காக மனுதாரரை பணிநீக்கம் செய்தோம் என்றால் அது எனக்கு தெரியாது, 2ம் எதிர்மனுதாரர் கேட்டுக்கொண்டதால் மனுதாரரை பணிநீக்கம் செய்தோம். என்ன ஒழுங்கீனம் என்று தெரியாமலேயே ஒரு தொழிலாளியை பணிநீக்கம் செய்ய முடியுமா என்றால் அது 2ம் எதிர்மனுதாரரைத்தான் கேட்கவேண்டும், 2ம் எதிர்மனுதாரர் கேட்டுக்கொண்டதால்தான் மனுதாரரை பணி நீக்கம் செய்தோம். **Ex.M**.3 குத்தகை ஒப்பந்தத்தில் வரிசை எண்.16ல், “ **The LESSOR shall provide the full details of Former employees/workers, whose services were terminated by the LESSOR and the LESSEE shall reinstate such employees/workers, only on the written instructions/ express consent of the LESSOR**.” என்று கூறப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த நிபந்தனையை 1ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் ஏற்றுக்கொள்கிறது என்றால் ஆமாம். மனுதாரருக்கு பணிக்கொடைத்தொகையை **DD** மூலம் என்ன காரணத்திற்காக அனுப்பினோம் என்றால் தொழிலாளர் துறையில் அவர் மனு தாக்கல் செய்து பணிக்கொடைத்தொகை வழங்கும்படி கேட்டதால் அவருக்கு அனுப்பினோம். மனுதாரருக்கு சேரவேண்டிய பணிக்கொடைத்தொகை மற்றும் இதர பணப்பலன்கள் அவருக்கு வழங்கவேண்டிய பொறுப்பு எங்களுக்கு உள்ளது என்று ஒப்புக்கொள்கிறோமா என்றால் 30.10.2009ம் தேதி வரை அவருக்கு வழங்கவேண்டிய பணப்பலன்களை வழங்கவேண்டிய பொறுப்பு எங்களுக்கு உள்ளது என்று ஒப்புக்கொள்கிறோம். அதற்கான எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுதாரரை 1ம் எதிர்மனுதாரர்தான் பணிநீக்கம் செய்தார் என்றும் 2ம் எதிர்மனுதாரர் மனுதாரரை எந்த காலத்திலும் பணிநீக்கம் செய்யவில்லை என்றும் அதனால் மனுதாரர் கேட்கும் அனைத்து பரிகாரங்களையும் வழங்க 1ம் எதிர்மனுதாரர் கடமைப்பட்டுள்ளார் என்றும் 2ம் எதிர்மனுதாரரிடம் எந்த பரிகாரமும் கேட்க முடியாது என்றும் சொன்னால் 01.11.2009 வரை தற்போது வரை 2ம் எதிர்மனுதாரர்தான் நிர்வாகம் பார்த்துவருவதால் 2ம்

எதிர்மனுதாரர்தான் பொருப்பு ஏற்க வேண்டும். ஒப்பந்த சரத்துக்களின்படி 1ம் எதிர்மனுதாரர் நடந்துகொள்ளாததால் இந்த மனு 2ம் எதிர்மனுதாரரை பொருத்து நிலைக்கத்தக்கதல்ல என்றால் தவறு.

(குறுக்கு விசாரணை மனுதாரர் தரப்பில் வேண்டுகோளின்பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.)